## COVER SHEET

| | | |
|---|---|---|
| 1 | Name of the Court | District Munsif cum Judicial Magistrate, Watrap |
| 2 | Case Number | C. C. No. 310/2024 |
| 3 | Date of judgment of Conviction / Dismissal / Reversal of Acquittal / Dismissal of Bail Application | 12.06.2026 |
| 4 | Name of Persons convicted / Acquitted / Reversed / Bail denied / Bail Cancelled | 1) Manimaran (A1)<br>S/o. Dharmalingam<br><br>2) Jeyakumar (A2)<br>S/o. Chinnasamy<br><br>3) Madhu (A3)<br>S/o. Muthaiah<br><br>4) Ananath(A4)<br>S/o. Dhanraj<br><br>5) Saroja (A5),<br>W/o. Dhanraj |
| 5 | Contact address of Legal Aid Committee of court complex in which the above court is situated | Taluk Legal Services Authority<br>Watrap |
| 5a | Designation of the Person to be contacted | Mr. Lingam (PLV)<br>Assistant Legal Aid Committee |
| 6 | Phone number of above Legal Aid Committee<br>Between **<u>09:30</u>** am to **<u>05:30</u>** pm | - |
| 7 | Alternative Mobile Number of Legal Aid Committee | 9751490706 |

RAMANATHAN MOORTHI

Digitally signed by RAMANATHAN MOORTHI
Date: 2026.06.12 18:38:06 +0530

M. RAMANATHAN
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
WATRAP

TNVR250001042025

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வத்திராயிருப்பு**

முன்னிலை. திரு. மூ.ராமநாதன், B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், வத்திராயிருப்பு

2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 12 ம் நாள் வெள்ளிக்கிழமை

ஆண்டுபட்டிகை வழக்கு எண்.310/2024

அரசுக்காக / காவல் சார்பு ஆய்வாளர்
வத்திராயிருப்பு காவல் நிலையம்
குற்ற எண்.113/2022

..... குற்ற முறையிடுபவர்

-எதிர்-

1. மணிமாறன் (வயது - 57/2026) (A1)
   த/பெ. தர்மலிங்கம்,
   வடக்கு தெரு, ஆகாசம்பட்டி
2. ஜெயக்குமார் (வயது - 56/2026)(A2)
   த/பெ. சின்னச்சாமி,
   நடுத்தெரு, இராமசாமியாபுரம்,
   கூமாப்பட்டி
3. மது (வயது - 47/2026)(A3)
   த/பெ. முத்தையா,
   வடக்குத்தெரு, ஆகாசம்பட்டி
4. ஆனந்த் (வயது - 47/2026)(A4)
   த/பெ. தன்ராஜ்,
   வடக்குத்தெரு, ஆகாசம்பட்டி
5. சரோஜா (வயது - 69/2026)(A5)
   க/பெ. தன்ராஜ்,
   வடக்குத்தெரு, ஆகாசம்பட்டி ... எதிரிகள்

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்குப்பட்டு முழு விசாரணைக்குப் பின்னிட்டு இறுதியாக 12.06.2026 அன்று இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. அரசு தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் நிலை II திரு.ஜெயக்குமார்., அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M. முத்துக்கனி அவர்கள் ஆஜராகியும் இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரீசிலனை செய்து இருதரப்பு வாதங்களையும் கேட்டு இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

Case Summary Details as per The Hon'ble Madras High Court
ROC No.814/2020/RG/F1 dt.1.4.2021

| Sl.No. | Particulars | Date |
|---|---|---|
| i) | The Period of the remand of the accused | A1-A3 – 24.03.2023 (AB)<br>A4, A5 – 05.12.2022 (AB) |
| ii) | The date of filing of the complaint/final report in the Court | 11.05.2022/ 22.07.2024 |
| iii) | The date committal of the case to the Court of Session | NIL |
| iv) | The date of questioning of the accused under section 240 | 30.10.2025 |
| v) | Filing of all miscellanous petitions and their results including the results on challenge before superior Courts : | 359 BNSS Petition filed in Cr.MP.No.307/2026, dt.12.06.2026 |
| vi) | Date of examination in – chief and cross-examination of a witness : | PW1 – 12.06.2026<br>PW2 – 12.06.2026<br>PW3 – 12.06.2026 |
| vii) | Date of examination of the accused under Section 313(1)(b) of the CRPC | 12.062026 |
| viii) | Details of abscondence of an accused and his appearance/production, as the case may be | NIL |
| ix) | Grant of stay by superior Courts and the results thereof | NIL |

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடப்பட்டது | : | 1 முதல் 4 வரையிலான குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது பிரிவுகள் 147, 294(b), 323, 324 இதச மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு -4 ன் கீழும், 5 வது குற்றம் சாட்டப்பட்ட நபர் மீது பிரிவுகள் 147, 294(b), 355 இதசவின் கீழும் |

| | | |
|---|---|---|
| குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | | 1 முதல் 4 வரையிலான குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது பிரிவுகள் 147, 294(b), 323, 324 இதச மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு -4 ன் கீழும், 5 வது குற்றம் சாட்டப்பட்ட நபர் மீது பிரிவுகள் 147, 294(b), 355 இதசவின் கீழும் |
| குற்றம் சாட்டப்பட்ட நபர்களின் பதில் | : | குற்றவாளிகள் இல்லை. |
| தீர்மானம் | : | முடிவில், 1 முதல் 4 வரையிலான குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது பிரிவுகள் 147, 294(b), 324 உ/இ 149, 323 உ/இ 149 இதச மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4 ன் கீழும், 5 வது குற்றம் சாட்டப்பட்ட நபர் மீது பிரிவுகள் 147, 294(b), 324 உ/இ 149, 323 உ/இ 149, 355 இதசவின் கீழாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்யப்பட்டு, சந்தேகத்தின் பலனை குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு வழங்கி குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து குற்றம் சாட்டப்பட்ட நபர்களை குவிமுச 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |

## தீர்ப்புரை

**புலன் விசாரணை அதிகாரியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற பத்திரிக்கையின் சுருக்கம் -**

கடந்த 08.05.2022 ம் தேதி காலை 12.00 மணியளவில் புகார்தாரரும், புகார்தாரரின் தம்பி மற்றும் புகார்தாரரின் தம்பி மனைவி மற்றும் புகார்தாரரின் மகன் ஆகியோர்கள் புகார்தாரரின் கணவரான 4 வது குற்றம் சாட்டப்பட்ட நபர் வேலைக்கு செல்லாமல் இருந்ததால், புகார்தாரர் முன்னால் வேலை செய்த ஓசூரிலுள்ள கம்பெனியில் வேலை செய்து அங்கே தங்கலாம் என்று முடிவு செய்து, புகார்தாரரின் பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டி Eicher வண்டியுடன் ஆகாசம்பட்டி வடக்கு தெருவிலுள்ள புகார்தாரரின் மாமியார் வீட்டிற்கு சென்றபோது, 1,2 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் இருவரும் புகார்தாரரை பார்த்து புருசனை வேண்டாம்னு போயிட்ட தேவிடியா

அப்புறம் என்ன புண்டைக்கு வந்த என்று அசிங்கமாக பேசி, 1வது குற்றம் சாட்டப்பட்ட நபர் புகார்தாரரின் கன்னத்தில் அறைந்து புகார்தாரரின் சுடிதாரை கிழித்து புகார்தாரரை கீழே தள்ளிவிட்டு அவமானப்படுத்தியும், புகார்தாரரின் தம்பியை 1 முதல் 4 வரையிலான குற்றம் சாட்டப்பட்ட நபர் கூதிமவனே நீ யாருடா எங்களை கேட்பதற்கு என்று கையாலும், பிளாஸ்டிக் சேராலும் அடித்து காயப்படுத்தியும், 5 வது எதிரியாகிய நீர் சண்டை விலக்கிய புகார்தாரை கீழே கிடந்த செருப்பால் அடித்தும், தேவடியா முண்ட என்று அசிங்கமாக பேசியும், கீழே தள்ளிவிட்டு புகார்தாரரின் முதுகில் ஓங்கி மிதித்து புகார்தாரருக்கு மார்பு மற்றும் முதுகு பகுதியில் வலிக்காயம், இடது முழங்கை மற்றும் கன்னத்தில் சிராய்ப்பு காயத்தை ஏற்படுத்தியும், புகார்தாரரின் தம்பிக்கு வலது முன்கை மற்றும் நெற்றியின் வலது பக்கம் சிராய்ப்பு காயத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக 1 முதல் 4 வரையிலான குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது பிரிவுகள் 147, 294(b), 323, 324 இதச மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு -4 ன் கீழும், 5 வது குற்றம் சாட்டப்பட்ட நபர் மீது பிரிவுகள் 147, 294(b), 355 இதசவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

2) வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி அழைப்பாணையின் படி குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஆஜராக, குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் நகல்கள் குவிமுச பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. பின்னர் குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு போதிய கால அவகாசம் வழங்கி குற்றம் சாட்டப்பட்ட நபர் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கு போதிய முகாந்திரம் இருந்தபடியால், குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது அரசு தரப்பால் அவருக்கு எதிராக சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து வினவிக்கேட்டபோது குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் குற்றத்தினை ஒப்புக்கொள்ளாமலும், பொய்வழக்கு எனவும் கூறினார்கள். ஆகையால், 1 முதல் 4 வரையிலான குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது பிரிவுகள் 147, 294(b), 323, 324 இதச மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு -4 ன் கீழும்,

5 வது குற்றம் சாட்டப்பட்ட நபர் மீது பிரிவுகள் 147, 294(b), 355 இதசவின் கீழான குற்றச்சாட்டினை வனைந்து விளக்கிய போது அவர் வழக்கை விசாரிக்க கோரி கேட்டதால் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு வழி வகை செய்யப்பட்டது.

3) அரசு தரப்பில் மொத்தம் 8 சாட்சிகள் பட்டியல் இடப்பட்டு அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**4) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்:-**

4.1) இவ்வழக்கில் கடந்த 08.05.2022 ம் தேதி 13.45 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு. பிரகஸ்பதி நிலையப் பொறுப்பில் இருந்த போது பாரதி உஷா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவை (அ.சா.ஆ.1) பெற்று நி.கு.எண்.113/2022, சட்டப்பிரிவுகள் 147, 323, 324, 355 IPC, 4 of TNPHW Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.2) பதிவு செய்தும், பின்பு அன்றைய தினம் 14.45 மணிக்கு சாட்சிகள் சரவணன், அழகுலட்சுமி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் (அ.சா.ஆ.3) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.4) தயார் செய்தும், **பின்னர்** சாட்சிகள் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், கடந்த 16.05.2022 ம் தேதி வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவர் முத்துபிரியா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றுகள் (அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6) பெற்றும், பின்னர் வழக்கின் சட்டப்பிரிவினை 147, 323, 324, 355 IPC, 4 of TNPHW Act-லிருந்து 147, 294(b), 323, 324, 355 IPC, 4 of TNPHW Act-ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை (அ.சா.ஆ.7) தயார் செய்தும், பின்னர் சார்பு ஆய்வாளர் திரு.அய்யனார் அவர்கள் வழக்கை மேல்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு புலன் விசாரணையை முடித்து குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

5) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு பாதகமான சங்கதிகள் குறித்து குவிமுச 313 (1) (ஆ) பிரிவின் கீழ் விளக்கிகேட்ட போது குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் பொய் சாட்சியம் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் யாரும் இல்லை எனவும் கூறிக் கொண்டார்கள். குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பிலும் வாதுரைகள் கேட்கப்பட்டது.

6) அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீதான குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்பட்டுள்ளதால் குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

7) குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீதான குற்றச்சாட்டுகள் சாட்சிய சான்றாவணங்கள் வாயிலாக அரசு தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிருபிக்கப்படவில்லை என்றும், ஆகையால் குற்றம் சாட்டப்பட்ட நபர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

## பிரச்சனை

8) அரசு தரப்பில், 1 முதல் 4 வரையிலான குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது பிரிவுகள் 147, 294(b), 323, 324 இதச மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு -4 ன் கீழும், 5 வது குற்றம் சாட்டப்பட்ட நபர் மீது பிரிவுகள் 147, 294(b), 355 இதசவின் கீழாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை தகுந்த சாட்சிய மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே தீர்வு செய்யப்படவேண்டிய பிரச்சனை ஆகும்.

<u>தீர்வு</u>

9) அரசு தரப்பு வழக்கில் 1 முதல் 4 வரையிலான குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது பிரிவுகள் 147, 294(b), 323, 324 இதச மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு -4 ன் கீழும், 5 வது குற்றம் சாட்டப்பட்ட நபர் மீது பிரிவுகள் 147, 294(b), 355 இதசவின் கீழான சாராம்சங்கள் காணப்படுகிறது என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துள்ளார்களா என்பதை ஆராய்ந்து பார்க்கையில்,

9.1) அரசு தரப்பில் 1 முதல் 5 வரையிலான குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் கலகம் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் பொது இடத்தில் சட்டவிரோதமாக ஒன்று கூடினார்கள் என்பதை அரசு தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?

9.1.1) 1 முதல் 5 வரையிலான குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஆகாசம்பட்டி, வடக்கு தெருவிலுள்ள 4 வது குற்றம் சாட்டப்பட்ட நபரின் வீட்டில் வைத்து சட்டவிரோதமாக ஒன்று கூடினார்கள் என்பதே அரசு தரப்பு வழக்காகும். அரசு தரப்பு வழக்கை நிரூபணம் செய்யும் வகையில் இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.1 மற்றும் அ.சா.2 தங்களது சாட்சியத்தில், குற்றம் சாட்டப்பட்ட நபர்களும், சாட்சிகளும் சமாதானமாக சென்றதாக பிறழ்சாட்சிகளாக மாறி அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக சாட்சியம் அளித்துள்ளார்கள். இந்நிலையில், அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தாக்கவேண்டுமென்ற எண்ணத்தில் கலகம் செய்யும் நோக்கத்தோடு சட்டவிரோதமாக ஒன்று கூடியதாக குறிப்பிட்டுள்ள இதச பிரிவு 147 ன் கீழான குற்றம் நிகழ்ந்ததாக கருத இயலாது, ஆகையால், குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டான இதச பிரிவு 147 ன் கீழான குற்றச்சாட்டு இவ்வழக்கில் நிகழ்ந்திருப்பதாக அரசுதரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9.2) அரசு தரப்பால் 1 முதல் 5 வரையிலான குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் பொது இடத்தில் வைத்து சாட்சிகளை அசிங்கமாக பேசி, கேட்போருக்கு முகம்சுழிக்கும் வகையில் நடந்துகொண்டார்கள் என்பதை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?

9.2.1) குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் கடந்த 08.05.2022 ம் தேதி காலை 12.00 மணியளவில் ஆகாசம்பட்டி, வடக்கு தெருவிலுள்ள 4 வது குற்றம் சாட்டப்பட்ட நபரின் வீட்டில் வைத்து, குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் அனைவரும் அ.சா.1 மற்றும் அ.சா.2 யை பார்த்து அசிங்கமாக பேசி, கேட்போருக்கு முகம் சுழிக்கும் வகையில் நடந்துகொண்டார்கள் என்பதே அரசு தரப்பு வழக்கு ஆகும். இதச பிரிவு 294(b) குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு அரசு தரப்பு குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் கீழ்காணும் சாராம்சங்களை நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள்.

1. சம்பவமானது பொது இடத்தில் நடந்தது என்றும்,

2. சம்பவத்தின்தொடர்ச்சியாக குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் பயன்படுத்திய தகாத வார்த்தைகளால் அருகில் இருந்தவர்களுக்கு அருவருப்பு ஏற்பட்டது என்றும் நிரூபிக்க வேண்டும்.

9.2.2) சம்பவமானது பொது இடத்தில் நடைபெற்றது என்பதை நிரூபிப்பதற்காக புலன் விசாரணை அதிகாரி புலன் விசாரணையின்போது அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆவணத்தை பட்டியல் சாட்சிகள் சரவணன் மற்றும் அழகுலட்சுமி ஆகியோர்கள் முன்னிலையில் தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆவணமானது வழக்கு சம்பவமானது ஆகாசம்பட்டி, வடக்கு தெருவிலுள்ள 4 வது குற்றம் சாட்டப்பட்ட நபரின் வீட்டில் வைத்து நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆவணமானது சம்பவ இடத்தில் வைத்து தயார்செய்யப்பட்டது என்பதே அரசு தரப்பு வழக்கு ஆகும். அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆவணத்தினை பார்வையிட்டது சம்பவமானது பொது இடத்தில் நடைபெறவில்லை என்பது தெளிவாகிறது.

9.2.3) மேலும், அரசு தரப்பால் விசாரிக்கப்பட்டுள்ள புகார்தாரரான அ.சா.1 மற்றும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் தகாத வார்த்தைகளால் பேசியதால் தங்களுக்கு அருவருப்பு ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காமல் குற்றம் சாட்டப்பட்ட நபர்களுடன் சமாதானமாக சென்றுவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும், அரசுதரப்பால் எவ்வித தனிநபர் சாட்சியங்களையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவில்லை. இவ்வாறாக, குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் பொது இடத்தில் வைத்து தகாத வார்த்தையால் பேசியதால் அருகில் இருந்தவர்களுக்கு அருவருப்பு ஏற்பட்டது என்று எவ்வித தனிநபர் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தாமல் விட்டு இருப்பது இதச பிரிவு 294(b) குற்றச்சாட்டிற்கான சாராம்சங்கள் இவ்வழக்கில் நிகழ்ந்திருப்பதாக கருத இயலாது. ஆதலால் 1 முதல் 5 வரையிலான குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 294(b) குற்றம் நிகழ்ந்ததாக அரசுதரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9.3) குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள மற்றொரு குற்றச்சாட்டான குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் சாட்சிகளுக்கு சிறுகாயம் மற்றும் கொடுங்காயத்தை ஏற்படுத்தினார்கள் என்று சொல்லப்பட்டுள்ள குற்றச்சாட்டினை நிரூபித்துள்ளார்களா?

9.3.1) குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் அ.சா.1 யை கன்னத்தில் அறைந்தும், கீழே தள்ளிவிட்டு இடது முழங்கையில் காயத்தையும், அ.சா.2 யை பிளாஸ்டிக் நாற்காலியாலும் அடித்து சிராய்ப்பு காயத்தையும் ஏற்படுத்தியுள்ளார்கள் என்பதே அரசு தரப்பு வழக்கு ஆகும். அரசு தரப்பு வழக்கை நிரூபணம் செய்யும் வகையில், அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் காயத்தை ஏற்படுத்தினார்கள் என்று குறிப்பிட்டிருந்தாலும், குற்றம் சாட்டப்பட்ட நபர்ளுடன் சமாதானமாக சென்றுவிட்டதாக குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆவணங்களின் மூலமாக சாட்சிகளுக்கு காயம் ஏற்பட்டுள்ள விவரம் தெரியவருகிறது.

9.3.2) அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆவணங்களானது வத்திராயிருப்பு அரசு மருத்துவமனை மருத்துவர் முத்துபிரியா சாட்சிகளை பரிசோதனை செய்து அவர்களுக்கு ஏற்பட்ட காயமானது சிறுகாயம் என்று விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றுகள் (அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6) வழங்கியுள்ளது தெரியவருகிறது. மேலும் காயம்பட்ட சாட்சிகள் காயம் ஏற்பட்டது குறித்து தெளிவாக சாட்சியம் அளிக்காத நிலையிலும், குற்றம் சாட்டப்பட்ட நபர்களுடன் சமாதானமாக சென்றதாக குறிப்பிட்டுள்ள நிலையிலும், குற்றம் சாட்டப்பட்ட நபர்களால் சாட்சிகளுக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளதை அரசு தரப்பில் அரசு தரப்பில் நிரூபிக்காத நிலையில், பிரிவுகள் 323 உ/இ 149 மற்றும் 324 உ/இ 149 இதசவின் கீழான குற்றம் நிகழ்ந்ததாக கருத இயலாது. ஆகையால், 1 முதல் 5 குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டான இதச பிரிவுகள் 323 உ/இ 149 மற்றும் 324 உ/இ 149 இதசவின் கீழான குற்றச்சாட்டுக்கள் இவ்வழக்கில் நிகழ்ந்திருப்பதாக அரசுதரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9.4) 5 வது குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள மற்றொரு குற்றச்சாட்டான 5 வது குற்றம் சாட்டப்பட்ட நபர் சாட்சிக்கு காயத்தினை ஏற்படுத்தினார் என்று சொல்லப்பட்டுள்ள குற்றச்சாட்டினை நிரூபித்துள்ளாரா?

9.4.1) 5 வது குற்றம் சாட்டப்பட்ட நபர் அ.சா.1 யை செருப்பால் அடித்தும், காலால் முதுகில் ஓங்கி மிதித்தும், அ.சா.1ன் மார்பு மற்றும் முதுகில் வலிக்காயத்தையும், இடது முழங்கையில் காயத்தை ஏற்படுத்தியுள்ளார்கள் என்பதே அரசு தரப்பு வழக்கு ஆகும். அரசு தரப்பு வழக்கை நிரூபணம் செய்யும் வகையில், அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் 5 வது குற்றம் சாட்டப்பட்ட நபர் காயத்தை ஏற்படுத்தினார் என்று குறிப்பிட்டிருந்தாலும், குற்றம் சாட்டப்பட்ட நபர்ளுடன் சமாதானமாக சென்றுவிட்டதாக குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.சா.ஆ.5 மற்றும்

அ.சா.ஆ.6 ஆவணங்களின் மூலமாக காயம் ஏற்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது. சாட்சிகளுக்கு காயச்சான்றிதழ் வழங்கிய மருத்துவரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யப்படாமல் விடப்பட்டுள்ளது தெரியவருகிறது- இந்நிலையில், மேற்படி காயமானது 5 வது குற்றம் சாட்டப்பட்ட நபரால் தான் சாட்சிகளுக்கு ஏற்பட்டுள்ளதை அரசு தரப்பில் நிரூபிக்காத நிலையில், மேற்படி குற்றமானது நிகழ்ந்ததாக கருத இயலாது. ஆகையால், 5 வது குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டான இதச பிரிவு 355- ன் கீழான குற்றச்சாட்டுக்கள் இவ்வழக்கில் நிகழ்ந்திருப்பதாக அரசுதரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9.5) குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டான பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டினை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளார்களா?

9.5.1) அரசு தரப்பில் குறிப்பிட்டுள்ளவாறு, குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் அ.சா.1 ன் பெண்மைக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டார்கள் என்பதே அரசு தரப்பு வழக்கு ஆகும். அதனை மெய்ப்பிக்க அரசு தரப்பு சாட்சியான அ.சா.1 மற்றும் அ.சா.2 தங்களது சாட்சியத்தில் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் அ.சா.1 ன் பெண்மைக்கு களங்கம் ஏற்படுத்தும் விதமாக நடந்து கொண்டதாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், மேலே காணும் பத்திகளில் ஆராய்ந்து பார்க்கையில், சம்பவமானது பொது இடத்தில் நடைபெறவில்லை என்பது தெரியவருகிறது. பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றமானது சம்பவமானது பொது இடத்தில் நடைபெற்றிருக்க வேண்டும். மேலும், சாட்சிகளின் சாட்சியத்தின் வாயிலாகவும் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் அ.சா.1 ன் பெண்மைக்கு களங்கம் ஏற்படுத்தினார்கள் என்பதை அரசு தரப்பில் நிரூபிக்கப்படாத நிலையில், பிரிவு 4 தமிழ்நாடு

பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றச் செயல் நிகழ்ந்ததாக அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்ய தவறிவிட்டதாகவே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9.6) இவ்வழக்கினை நிரூபணம் செய்ய வேண்டிய அ.சா.1 யே குற்றம் சாட்டப்பட்ட நபர்களும் சமாதானமாக சென்றதாகவும், சந்தேகத்தின்பேரில் புகார் மனு கொடுத்திருப்பதாகவும் சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், இவ்வழக்கின் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ள சார்பு ஆய்வாளர் சாட்சியத்தின் அடிப்படையில் மட்டுமே குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிராக வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தான் புரிந்துள்ளார்கள் என முடிவு செய்வது நீதிக்கு உகந்ததாக அமையாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், அரசு தரப்பில் சாட்சிகளாக இந்நீதிமன்றத்தில் விசாரிக்கப்படாமல் பட்டியல் சாட்சி 3 முதல் பட்டியல் சாட்சி 8 வரையிலான சாட்சிகள் கைவிடப்பட்டுள்ளது, அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக அமைவதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

<u>முடிவு :-</u>

10.1) முடிவில், 1 முதல் 3 வரையிலான குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது பிரிவுகள் 147, 148, 294(b), 324, 323 உ/இ 149 506(ii) இதசவின் கீழும், 4,9 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது பிரிவுகள் 147, 148 உ/இ 149, 294(b), 323, 324 உ/இ 149 506(ii) இதசவின் கீழும், 5 முதல் 8 மற்றும் 11 முதல் 13 வரையிலான குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது பிரிவுகள் 147, 148 உ/இ 149, 323 உ/இ 149, 324 உ/இ 149, 294(b), 506(ii) இதசவின் கீழாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்யப்பட்டு, சந்தேகத்தின் பலனை குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு வழங்கி குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து குற்றம் சாட்டப்பட்ட நபர்களை குவிமுச 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

10.2) இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

10.3) குற்றம் சாட்டப்பட்ட நபர்களும், ஜாமீன்தாரர்களும் எழுதிக்கொடுத்த பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2026 ம் வருடம் ஜுன் மாதம் 12 ம் நாளாகிய இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

RAMANATHAN MOORTHI

Digitally signed by RAMANATHAN MOORTHI
Date: 2026.06.12 18:38:21 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
வத்திராயிருப்பு.

**1. அரசுத் தரப்பு சாட்சிகள் -**

| | | | |
|---|---|---|---|
| அ.சா.1 | - | பாரதி உஷா | புகார்தாரர் |
| அ.சா.2 | - | ஜனார்த்தனன் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | - | கோட்டியப்பசாமி | விசாரணை அதிகாரி |

**2. அரசுத் தரப்பு சான்றாவணங்கள் -**

அ.சா.ஆ.1 - புகார் மனு

அ.சா.ஆ.2 - முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.3 - பார்வை மகஜர்

அ.சா.ஆ.4 - மாதிரி வரைபடம்

அ.சா.ஆ.5 - காயச்சான்று (வத்திராயிருப்பு அரசு மருத்துவமனை)

அ.சா.ஆ.6 - காயச்சான்று (வத்திராயிருப்பு அரசு மருத்துவமனை)

அ.சா.ஆ.7 - சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

**3. அரசு தரப்பு சான்று பொருள்** - இல்லை

**4. எதிரிகள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள்** - இல்லை.

RAMANATHAN MOORTHI

Digitally signed by RAMANATHAN MOORTHI
Date: 2026.06.12 18:38:27 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்

நீதித்துறை நடுவர்,

வத்திராயிருப்பு.

**குறிப்பு -**

1. விசாரணையின் போது குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் பிணையில் இருந்தார்கள்.

2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.

3. வழக்கின் முடிவு காவல் துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.